விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 269 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 28 வெள்ளிக்கிழமை (13.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு

## எதிர்வரும் 3 வருடங்களுக்குள் நிரந்தரத் தீர்வு - ரணில்



(கொழும்பு)

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு எதிர்வரும் 3 வருடங்களுக்குள் நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகவியலாளர்களைக் கொழும்பில் சந்தித்து அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே 15

## ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கே ஆதரவு

### தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க மேற்கொண்ட தீர்மானத்தில் மாற்றங்கள் இல்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. 15



# திருமலையில் அதிகரிக்கும் சிங்களக் குடியேற்றங்கள்

- தமிழர்களின் சரித்திரம் மற்றும் கலாசாரத்தை அழிப்பதே பிரதான நோக்கம்.
- த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட் வெளியிட்ட ஆய்வில் சுட்டிக்காட்டு.

**தமிழ் மக்களின் சரித்திரம் மற்றும் கலாசாரத்தை அழிப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு திருகோணமலையில் சிங்களக் குடியேற்றம் முன்னெடுக்கப்படுவதாக த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட் வெளியிட்ட ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இயங்கிவரும் "த ஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்" என்ற கல்வியகத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் நில அபகரிப்புக்கள் தொடர்பான தரவுகளையும், ஆவணப்படுத்தல்களையும் உள்ளடக்கிய "ஆக்கிரமிப்பின் கீழ் திருகோணமலை இலங்கையில் தமிழர் தாயகத்தை இலக்கு வைக்கும் நில அபகரிப்பு" எனும் தலைப்பிலான 32 பக்க ஆய்வறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. 15

தொடர் காய்ச்சல்

## யாழ்.போதனாவில் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தொடர் காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருச்செல்வம் விஜயசெல்வன் (வயது-50) என்ற மூன்று பிள்ளை 15

## பொருளாதாரம் விஸ்தரிக்கப்படும்

### அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின்பொருளாதாரத்தை விஸ்தரிப்பதற்குத் தமது அரசாங்கத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேசிய மக்கள் கட்சி 02

## அநுரவை கைது செய்க

### முறைப்பாடு பதிவு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் தலைவருமான அநுர குமார திஸாநாயக்கவை கைது செய்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் 15

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்

### யாழில் ஜனாதிபதி வேட்பாளர் நாமல்

(யாழ்ப்பாணம்)

- வடக்கு, கிழக்கு இணைக்கப்படாது.
- காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாது.
- மக்களுடன் ஆராய்ந்து 13ஆம் திருத்தம் தொடர்பில் முடிவு. *(15ஆம் பக்கம் பார்க்க)*




## மகிந்தவை கொல்ல சதித்திட்டம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கொலை செய்வதற்கான சதித்திட்டம் இன்னமும் முன்னெடுக்கப்படுவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் 15

பௌத்தத்தைப் பாதுகாப்பேன்

## ஏனைய மதங்களுக்கு உரிய அந்தஸ்து - சஜித்



(கொழும்பு)

பௌத்த மதத்தைப் பாதுகாப்பதோடு ஏனைய மதங்களுக்கும் உரிய அந்தஸ்தை வழங்கிச் செயற்படுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். 15

## தெல்லிப்பழையில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராசையா கார்த்தீபன் (வயது-64) என்பவரே சடலமாக மீட்கப்பட்ட வராவார். 15

## பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் மீது கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பிரதேச சபை முன்னாள் உறுப்பினரான கந்தப்பு கிரிதரன் என்பவர் மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நெல்லியடியில் வைத்து குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த நபரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த 4 பேர் அடங்கிய குழுவினராலேயே கத்திக்குத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


கத்திக்குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்திருந்தவரை அயலவர்கள் மீட்டு நோயாளர் காவு 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெல்க தமிழ்

சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!



எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்.
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.



(C-017)

தமிழ்ப் பொது வேட்பாளர்

பா.அரியநேத்திரன்

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு


## பொரு...

யின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி மஹியாவ பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், பொருளாதாரம் வரம்பில் சிக்கியுள்ளது.

ஏன் இவர்களுக்கு மட்டும் லஞ்சம் வாங்கும் அளவிற்கும் மட்டுமே பொருளாதாரம்? நாம்இதை விட பொருளாதாரத்தை பெரிதாக்குவோம்.

நாங்கள் நாட்டை பொறுப்பேற்று கட்டியெழுப்பத் தயார் என்றார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு. **வீரகத்திப்பிள்ளை சேந்தன்** அவர்களின் பாசமிகு தாயாரான



அமரர்
**வீரகத்திப்பிள்ளை சிவகாமசுந்தரம்**

தோற்றம் 1942.01.10 மறைவு 2024.09.12

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் :
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலம், பாடசாலைச் சமூகம்.

(1922)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் வித்தியாசாலையின் ஆசிரியர்
திரு. **வீ.சேந்தன்**
அவர்களின் பாசமிகு தாயார்



**அமரர் வீரகத்திப்பிள்ளை சிவகாமசுந்தரம்**


தோற்றம் 1942.01.10 மறைவு 2024.09.12

அவர்களின் மறைவால் துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை**

(336)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## சின்னராசா செல்வராசா
## (ராஜன்)

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 08.06.1967 | 27.08.2023 |

அவர்களின் சிவபேறு குறித்த ஆண்டு திவச கிரியைகள் 14.09.2024 நாளை சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(1771)

தகவல்: **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஆரம்பப் பொது வழங்கல் (IPO) இன்று ஆரம்பம் !

1,379,310,400 வரையான புதிய சாதாரண வாக்குரிமைப் பங்குகளை, ஒரு பங்கின் விலை ரூபா 14.50 வீதம் மொத்தமாக ரூபா 20,000,000,800/- வரையான நிதியை திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

QR குறியீட்டை ஸ்கேன் செய்து அல்லது www.ltl.lk/ipo ஊடாக தகவல் தொகுப்பை (Prospectus) பதிவிறக்கம் செய்து மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பொது வழங்கலுக்கான கூட்டு மேலாளர்கள்

NDB Investment Bank

CT CLSA Commitment. Trust. Continuity

LTL HOLDINGS LIMITED

(c-2432)

இலங்கையின் மாபெரும் ஆரம்பப் பொது வழங்கல் (IPO)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய டெஸ்ட் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிப்பு



இந்தியாவுக்கு எதிராக இம் மாதம் இடம்பெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள 16 பேர் கொண்ட அணியினை பங்களாதேஷ் கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

நஜ்முல் ஹொசைன் சாண்டோ இந்த அணியின் தலைவராக உள்ளார். பாகிஸ்தானுக்கு எதிராக உள்ளூரில் நடந்த டெஸ்ட் தொடரின் வரலாற்று வெற்றிக்கு பின்னர் பங்களாதேஷ் இந்த போட்டியை எதிர்கொள்ளவுள்ளது.

இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியானது இம் மாதம் 19 ஆம் திகதி சென்னையில் ஆரம்பிக்கும். அதைத் தொடர்ந்து இரண்டாவது போட்டி, 27 ஆம் திகதி கான்பூரில் தொடங்கும்.


நஜ்முல் ஹொசைன் சாண்டோ (தலைவர்), மஹ்முதுல் ஹசன் ஜாய், ஜாகிர் ஹசன், ஷத்மான் இஸ்லாம், மொமினுல் ஹக், முஷ்பிகுர் ரஹீம், ஷாகிப் அல் ஹசன், லிட்டன் குமர் தாஸ், மெஹிதி ஹசன் மிராஸ், தைஜல் இஸ்லாம், நயீம் ஹசன், நஹித் ராணா, ஹசன் மஹ்முத், தஸ்கின் அகமட், சையத் காலித் அகமட், ஜாக்கர் அலி அனிக் ஆகியோர் விளையாடவுள்ளனர். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 150-180 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 190 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 200 |
| தக்காளி | 200 | 220 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 240 | 150-170 |
| கோவா | 250 | 300 | 300 | 260 |
| கரட் | 250 | 260 | 300 | 250 |
| பூசணி | 80 | 50 | 100 | 60 |
| புடோல் | 60 | 130 | 80 | 80-100 |
| வாழைக்காய் | 250 | 200 | 240 | 200-220 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 100-150 |
| பெரிய வெங்காயம் | 280 | 180 | 250 | 270 |
| பாகற்காய் | 350 | 300 | 300 | 350 |
| வெண்டக்காய் | 80 | 80 | 100 | 70-100 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 240 | 140 |
| பயற்றங்காய் | 150 | 120 | 100 | 100-160 |
| லீக்ஸ் | 300 | 300 | 320 | 270 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 70-100 |
| கறிமிளகாய் | 400 | 450 | 450 | 450 |
| முருங்கைக்காய் | 300 | 280 | 200 | 150-220 |
| போஞ்சி | 250 | 340 | 350 | 300 |
| கத்தரி தம்புள்ள | 180 | 150 | -- | -- |
| கீரை - 1 பிடி | 130 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 120 | 80-110 |
| இராசவள்ளி | -- | 900 | -- | 650 |
| வெங்காயப்பூ | 350 | 380 | 400 | -- |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 90 |
| வல்லாரை | 60 | 30 | 70 | 100 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 90 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3219

**ரேணுயன்**




**சஞ்சனா**




**கிஷாளினி**




**ஜஸ்மி**




**தனோஜ்**




**விநுயா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ கனவை நனவாக்க விடமாட்டேன்

## நாமல் சூளுரை

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் அன்று கோரிய தமிழீழக் கனவு நனவாக ஒருபோதும் இடமளியேன் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அவிசாவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "வடக்கு, கிழக்கு இணைப்புக்கு சில கட்சிகள் கொள்கை ரீதியில் ஆதரவு தெரிவிக்கின்றன. இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

நாம் ஒற்றையாட்சியைப் பாதுகாப்போம். மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க மாட்டோம்.

அனைத்து மக்களினதும் மதம் மற்றும் கலாசார உரிமைகள் பாதுகாக்கப்படும்.

முதலீடு என்ற போர்வையில் தேசிய வளங்களை விற்பனை செய்யும் சூழ்ச்சி நடவடிக்கைக்கும் இடமளிக்க மாட்டோம்" எனத் தெரிவித்தார். (நி)



## "பன்முக நோக்கில் பாரதி" யாழில் இடம்பெற்ற நிகழ்வு





(யாழ்ப்பாணம்)

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு லிங்காஸ்வர கீதம் வழங்கிய "பன்முக நோக்கில் பாரதி" எனும் விசேட நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் படைப்புகளை இசை, நடனம், இலக்கியம் என்னும் பல்கோண பார்வையில் வெளிப்படுத்தும் வகையிலான பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. (நி-33)


**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 23 - 12 - 1952

இறப்பு 23 - 09 - 2023



அமரர். சீனிமுத்து திரவியமலர்

திதி - 13.09.2024

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயரம் – என்றும் நீங்கா நினைவுகளுடன்

(334)

"திரவிய பவனம்" மனோகரா, அல்வாய்.

குடும்பத்தினர்.



**கேள்வி அறிவித்தல்**

**தனியார் சுத்திகரிப்பு சேவை- திருத்தம்**

2024.09.03 ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் 07 ஆம் பக்கத்தில் பிரசுரமான **"கரைச்சி பிரதேசசபை கிளிநொச்சி தனியார் சுத்திகரிப்பு சேவை பெற்றுக் கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல்- 2023/2024"** என்ற விளம்பர அறிவித்தலின் தலைப்பில் கேள்வி கோரல் காலப்பகுதி 2023/2024 என குறிப்பிடப்பட்டிருந்தமைக்கு பதிலாக 2024/2025 என திருத்தம் செய்யப்படுகின்றது. ஏனைய விடயங்களில் மாற்றங்கள் எவையும் இல்லை.

செயலாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(இ) (சி-1105)



**லங்கா மஹால் (PVT) LTD**

DHL

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(சி-336)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

**077 839 3974**


## இராசிபலன்

13.09.2024
ஆவணி 28, வெள்ளிக்கிழமை
தசமி முன்னிரவு 6.12 மணிவரை

பூராடம் முன்னிரவு 6.26 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணி வரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

சந்திராஷ்டமம்- கார்த்திகை, ரோகிணி

வளவன்

**மேஷம்** – சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்** – ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**மிதுனம்** – நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், அலங்கார பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்** – உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உடல் நலன் சீராகும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**சிம்மம்** – அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**கன்னி** – சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள்.

**துலாம்** – நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, உறவினர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர்.

**விருச்சிகம்** – சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு** – ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** – இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


**கும்பம்** – செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தூர தேசத் தொடர்புகள் எண்ணியபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** – தொழில் நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**வாழ்வில் நமக்கு சொந்தம் என்று சொல்லக் கூடிய சொத்து நம் செயல்களே.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆதீனத்திற்கும் ஆயர் இல்லத்திற்கும் சென்று கலந்துரையாடிய நாமல்





(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜனபெரமுனவின் சார்பில் போட்டியிடும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தேர் தல் பிரசார நடவடிக்கை களுக்காக யாழ்ப்பாணத் திற்கு வருகை தந்த நிலை யில் சமய பெரியார்களை சந் தித்து ஆசி பெற்றதுடன் பல்வேறு விடயங்கள் தொடர் பிலும் கலந்துரையாடி னார். (நி-33)

# 'பரிசில் தினம்'

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இந்துக் கல்லூரியின் பரிசில் தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி யளவில் பாடசாலை அதிபர். ந.தயாளன் தலைமையில் நடை பெறவுள்ளது.இந் நிகழ்வின் பிர தம விருந்தினராக யாழ்.பல் கலைக்கழக கல்வித்துறைப் பேரா சிரியர் திருமதி. ஜெ.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (நி)

# கருத்துரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் போராட்ட முன்னணி யின் ஜனாதிபதிவேட்பாளர் நுவன் போபகேயின் கருத்துரையும் திறந்த கலந்துரையாடலும் சிகா. செந்தில்வேல் தலைமையில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் சந்தி 62, கே.கே. எஸ் வீதியிலுள்ள கவிஞர் மருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (நி)

# 'நாளைய முதலீடு' பல்கலையில் இளங்கலை ஆய்வு மாநாடு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் "இளங்கலை ஆய்வு மாநாடு" இன்று 13 ஆம் திகதி வெள் ளிக்கிழமை ஆரம்பமாகவுள் ளது. "நாளைய முதலீடு - வளர்ந்துவரும் நிதித்துறைப் போக்குகளை ஆராய்தல்" என்ற தொனிப்பொருளுடன் சீ.எஃப்.ஏ ஸ்ரீலங்காவின் அனு சரணையுடன் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவத் துறை இந்த ஆய்வு மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட கேட்போர் கூடத்தில் நிதித்துறைப் பேரா சிரியர் திருமதி. ரதிராணி யோகேந்திரராஜா தலைமை யில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறி சற்குணராஜா, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன், சீ.எஃப்.ஏ ஸ்ரீல ங்கா குழுமத்தின் பணிப்பா ளர்களில் ஒருவரான நுவான் ஜெயவர்த்தன ஆகியோர் சிறப் புரைகளை ஆற்றவுள்ள னர்.

கொழும்பு பல்கலைக் கழ கத்தின் நிதியியல் பேராசிரியர் திருமதி. சாந்தரூபிபுவ னேந்திரா மற்றும் சீ.எஃப்.ஏ ஸ்ரீலங்கா குழுமத் தலைவர் அருணபெரேரா ஆகியோர் முதன்மை உரைகளை வழங்கவுள்ளதுடன் மாண வர்களுக்கான தொழில் வழி காட்டல் மற்றும் சிறப்புத் தேர்ச் சிக்கான வழிகாட்டல் அமர்வும் இடம்பெறவுள்ளது. (நி-33)





மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் 103 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்றுமுன் தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் பாரதி வீதி திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் மதகுருமார், வலிமேற்கு பிரதேச செயலாளர், வலிமேற்கு பிரதேசசபை செயலாளர், கிராம சேவையாளர், பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்-சிவசாந்தன்)

# யாழ்ப்பாண மாவட்ட விவசாய குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விவ சாய குழுக்கூட்டம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருத லிங்கம் பிரதீபன் தலைமை யில் நேற்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது. இக் கலந்துரையாட லில் கருத்து தெரிவித்த அர சாங்க அதிபர் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய விவசாயத் துறையிலும் முன்னேற்றம் காணவேண்டும்

இனிவருங்காலங்களில் விவசாயக் கூட்டங்களுக்கு இளம் விவசாயிகள் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் நவீன விவசாயத்தை அறிமுகப்படுத் தும் போது அதன் சாதக பாதக விளைவுகளை ஆராய வேண் டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் வங்கிகளால் வழங் கப்படும் விவசாய கடன்கள் பற்றிய தெளிவூட்டல்கள், 2024 ஆம் ஆண்டுக்கான பெரும்போக விவசாய திட்டங் கள், சிறந்த விவசாயிகளுக் கான கௌரவிப்பு விழா, விவ சாய நவீனமயமாக்கல் என்பன தொடர்பாக ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப் பாளர், சமுர்த்திப்பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், விவ சாயத் திணைக்கள பதில் பணிப் பாளர், யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.எஸ். ஜே. அரசகேசரி, கமநல அபி விருத்தி திணைக்கள பிரதி நிதிகள், வங்கி மற்றும் கமக் கார அமைப்புக்களின் பிரதி நிதிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (நி)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யா/இருபாலை கிழக்கு கேணிக் குளம்பதி அருள்மிகு லிங்க விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங் கள் உற்சவங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழா வும் இடம்பெறும் என ஆலய நிர் வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நி)

# பொன்.சிவபாலனின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர முன்னாள் முதல்வரும் தமிழர் விடுத லைக் கூட்டணியின் சட்டத் துறைச் செயலாளருமான அமரர்.பொன்.சிவபாலனின் 26 ஆவது வருட நினைவு நாள் நேற்று முன்தினம் புதன்கிழமை அன்னாரது சித்தங்கேணி இல்லத்தில் நடைபெற்றது.

குடும்ப உறுப்பினர்க ளால் ஏற்பாடு செய்யப்பட்ட நினை வேந்தலின்போது திருவுருவப்படத்திற்கு ஈகைச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் குடும்ப உறுப்பினர் களும் யாழ்.மாநகரசபை யின் முன்னைநாள் உறுப் பினர் த.முகுந்தன் ஆகி யோர் அஞ்சலி செலுத் தினர். (நி-33)







நடைபெற்று முடிந்த நல்லூர் உற்சவத்தின் போது நல்லூர் கந்தனின் அடியவர்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்திருந்தனர். ஒவ்வொரு வருடமும் தங்களுடைய திட்டமிடல் விரிவாக்கம் போன்றனவற்றை உள்ளடக்கிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினருடைய ஆயுள் காப்புறுதிப்பிரிவினர் மேற்கொண்டு வரும் சிறப்பு நிகழ்ச்சிகள் இம்முறையும் வெகு சிறப்பாக இடம்பெற்றது. இதில் SLIC - Life Insurance தங்களுக்கென தனியாக கொட்டகைகள் அமைத்து, அனைத்து அடியார்களுக்கும் காப்புறுதியின் முக்கியத்துவம் போன்ற அனைத்து விளக்கங்களும் கொடுக்கப்பட்டது. பல போட்டி நிகழ்ச்சிகள் ஊடாக பெறுமதி மிக்க பல பரிசுகளையும் பகிர்ந்தளித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்த உற்சவ காலத்தில் விசேட தாகசாந்தி நிலையமும் தங்களது பணிகளை மேற்கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் வன்முறை அபாயம்!

## உச்சகட்ட பாதுகாப்பு வழங்க தீர்மானம்

**(கொழும்பு)**

**ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்குப் பின்னர் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களால் வலிந்து வன்முறைகள் உருவாக்கப்படலாம் என்ற அச்சம் இருப்பதால் எதிர்வரும் 21ஆம் திகதி வாக்களிப்பு நடந்த கையோடு உச்சகட்டப் பாதுகாப்பை வழங்குவது குறித்து தேசிய பாதுகாப்புச் சபையில் தீவிரமாக ஆராயப்பட்டுள்ளது.**

தேர்தலில் தங்களுக்கு கிடைக்கும் வாக்குகள் தொடர்பில் இப்போது பகிரங்கமாக கருத்துகளை வெளியிட்டு வரும் சில அரசியல் கட்சிகள் தேர்தலின் பின்னர் தாம் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்காத பட்சத்தில் வன்முறைகளைத் தூண்டலாம் என்று அரச புலனாய்வுத்துறை முன்னதாக எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாகத் தெரிவானாலும் நியமனம் இரத்தாகலாம்.

இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரொருவர் தேர்தல் விதிமுறைகளை மீறும் பட்சத்தில் அவர் ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்வதற்கு முன்னர் தேர்தல் மனுவொன்றினூடாக அவரது நியமனத்தை இரத்துச் செய்வதற்கான சட்ட ஏற்பாடுகள் காணப்படுவதாக ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளரொருவர் ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்ததன் பின்னர் அவருக்கு ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் கிடைக்கப் பெறுகின்றன. அத்துடன் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் இது வரை தேர்தல் விதிமுறை களை மீறிய பாரிய சம்பவங்கள் பதிவாகவில்லை.

எனினும், நடைமுறையிலுள்ள சட்டங்களை மேலும் கடுமையாக அமுல்படுத்துவதற்கு தமக்கு அனைத்து அதிகாரங்களும் உள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

# தேர்தல் பரபரப்பின்றி அமைதியாக உள்ளது வடக்கு

## அமைதியான நீர்த்தேக்கம் ஆழமானது என்கிறார் மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

வடமாகாணத்தில் தேர்தல் நடத்தப்படாத சூழ்நிலை போன்று முற்றாக அமைதியாக இருப்பதாகவும் அமைதியான நீர்த்தேக்கத்தின் ஆழம் அதிகம் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார்.


ஏனைய மாகாணங்களில் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை.

அத்துடன் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் முதல் முடிவுகளை இரவு 11 மணியளவில் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்வரும் 18ஆம் திகதியுடன் தேர்தல் பிரசாரங்களுக்கு தடை விதிக்கப்படவுள்ளது.

தேர்தல் தினத்தன்று தனிநபர் ஒருவர் சின்னத்தைக் காட்டி வீதியில் நடமாட முடியும் என்றாலும், ஊர்வலமாகச் செல்வதைத் தடைசெய்யும் திறன் பொலிஸாருக்கு உண்டு என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எனினும் தேர்தல் தினத்தன்றும் மக்கள் தமது தேவைக்காக சின்னங்களைக் கொண்டு செல்லும் போது அதுவும் ஒருவித பிரசாரமாக மாறும் எனவும் சுட்டிக்காட்டினார். (நி)



# பல்கலைக்கழக மாணவர்கள் வாக்களிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடலாம்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

"ஜனாதிபதித் தேர்தலில் பல பல்கலைக்கழக மாணவர்கள் வாக்களிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும்" என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாடு பப்ரல் அமைப்பினால் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், ருகுணு மற்றும் களனி பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிலருக்கே இவ்வாறு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை இழக்க நேரிட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை, நாள் முழுவதும் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுவதால் தூரப்பிரதேசங்களில் வசிக்கும் மாணவர்கள் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்குவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் ஆராய்ந்து தீர்வுகளை வழங்குவதற்கு பல்கலைக்கழக வேந்தர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் நிமல் புஞ்சிஹேவா மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>1 இல் சூரி செவ்<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: O/L, Manager<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14770 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: குணமுள்ள ஆண்<br>தொ.இ: G/14716 |
| பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>12 இல் செவ்<br>கி.பா: 32 1/2<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: QS, Cashier<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14772 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>12 இல் செவ்<br>கி.பா: 23 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BFA, DO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14718 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>11 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, Parcel Field Officer(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்து, பிள்ளைகளற்ற விவாகரத்தானவர்<br>தொ.இ: B/14773 | பிறப்பு: 2001 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>11 இல் செவ்<br>கி.பா: 2 1/2<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14721 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# மக்கள் தங்கியிருந்த பாடசாலை மீது தாக்குதல்

## ஐ.நா பணியாளர்கள் அறுவர் உட்பட 14 பேர் காசாவில் உயிரிழப்பு



(காசா)
காசாவில் இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் தங்கியிருந்த பாடசாலையொன்றின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் ஐ.நாவின் பணியாளர்கள் ஆறு பேர் உட்பட 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா தெரிவித்துள்ளது.

காசாவின் மத்தியில் உள்ள நுசெய்ரட்டின் இரு பாடசாலைகள் தாக்கப்பட்டன. கொல்லப்பட்டவர்களில் பாலஸ்தீன அகதிகளிற்கான ஐ.நாவின் அமைப்பின் புகலிடத்தின் முகாமையாளர் உட்பட பலர் உள்ளனர் என ஐ.நா தெரிவித்துள்ளது.

இதேவேளை பாடசாலை மைதானத்தில் அமைந்திருந்த ஹமாசின் கட்டுப்பாட்டு நிலையத்தின் மீது துல்லியமான தாக்குதலை மேற்கொண்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

தாக்குதல் இடம்பெற்ற வேளை அங்கு 5000 இற்கும் அதிகமானவர்கள் காணப்பட்டனர் என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் யுத்தம் ஆரம்பித்தது முதல் இது வரை ஐந்து தடவைகள் இந்தப் பாடசாலை மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த பாடசாலையில் இடம்பெயர்ந்த சுமார் 12000 பேர் தங்கியுள்ளனர்.

காசாவில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் பாடசாலைகளைத் தொடர்ச்சியாகத் தாக்கிவரும் இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பினை இலக்கு வைப்பதாகத் தெரிவித்துவருகின்றது. (நி)

# கென்யாவில்

# விமான நிலைய ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டம்



(நைரோபி)
நைரோபி விமான நிலையத்தை அதானி நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து விமான நிலைய ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் விமான சேவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கென்யா தலைநகர் நைரோபியில், உள்ள ஜோமோ சர்வதேச விமான நிலையத்தை 30 ஆண்டுகளுக்கு நிர்வகிக்கும் ஒப்பந்தத்தை அதானி குழுமத்திற்கு சுமார் ரூ.15,000 கோடிக்கு தர கென்யா அரசு முடிவு செய்துள்ளது. இதனால் உள்ளூர் மக்களின் வேலை வாய்ப்பு பறிபோகும் என்றும் வெளிநாட்டவர்கள் அதிகளவில் வேலையில் அமர்த்தப்படுவர் எனக் கூறி விமான நிலைய ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.


இதனைக் கண்டித்து அவர்கள் போராட்டம் நடத்துவதாகப் பலமுறை அறிவிப்பை வெளியிட்டனர். ஆனால் ஒவ்வொரு முறையும் பேச்சுவார்த்தை நடத்தி போராட்டம் நடைபெறாமல் கென்யா அரசு பார்த்து கொண்டது.

ஆனால் நேற்று ஜோமோ சர்வதேச விமான நிலைய ஊழியர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதானியே வெளியே செல் என்று முழக்கமிட்டு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். விமான நிலைய ஊழியர்களின் போராட்டம் காரணமாக நைரோபி விமான நிலையமே ஸ்தம்பித்தது.

ஏராளமான விமானங்கள் தாமதமான நிலையில், பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அணு

# வட



# ▪▪அமேசானில்▪▪

# வரலாறு காணாத வறட்சி

(பிரேசில்)
கடந்த சில தினங்களுக்கு முன் பிரேசிலிய புவியியல் சேவை, அமேசான் படுகையில் உள்ள அனைத்து ஆறுகளும் வரலாறு காணாத அளவில் குறையும் என்றும் இதனால் உள்ளூர் சமூக மக்கள் கடுமையான சவால்களைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்திருந்தது.

இத்தகைய சூழலில், அமேசான் மழைக் காடுகளின் வழியாகச் செல்லும் ஆறுகளில் நீர்மட்டம் கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

வழக்கமாக ஜூன் கடைசி வாரத்தில் இருந்து ஜூலை முதல் வாரத்தில் இங்கே வறட்சிக் காலம் தொடங்கும். ஆனால் நடப்பாண்டில், ஜூன் முதல் பாதியிலேயே நீர் வரத்து குறைந்துள்ளது. கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் சராசரியை விட குறைவாகக் காணப்படுகிறது.

நவம்பர் 2023 முதல் ஏப்ரல் 2024 வரை அமேசான் பகுதிகள் சராசரிக்கும் குறைவான மழைப் பொழிவைப் பெற்றுள்ளது.

வறட்சி காரணமாக ஆறுகளில் பயணம் மேற்கொள்வது கடுமையாக இருப்பதாகவும் நீர் [illegible] அளவிற்கு கலங்கலாக இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக ஆற்றங்கரைகளில் வசிக்கும் மக்கள் தங்களது குடிநீர் தேவைக்காக வெளியில் இருந்து வரும் நீரை நம்பியுள்ளனர்.

ஆறுகளை நம்பி மீன்பிடிக்கும் தொழிலை செய்யும் சமூகங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளும் பயிர்களுக்கு தண்ணீர் இன்றி சமீப நாட்களில் தத்தளித்து வருகின்றனர்.



இருக்கும் தண்ணீரும் அதிகளவில் சூடாக காணப்படுவதால் நீர்வாழ் உயிரினங்களின் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெளிநாடு

# ணு ஆயுத போருக்கு
# கொரியா தயார்!

**(பியாங்யாங்)**

**அமெரிக்காவின் செயற்பாடு நாளுக்கு நாள் அச்சுறுத்தல் அளிக்கும் வகையில் உள்ளது. இதனால் அமெரிக்காவுடனான அணு ஆயுதப் போருக்கு தயாராக இருக்க வேண்டும் என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அறிவித்துள்ளார்.**



தென்கொரியா தலைநகரான சியோல் அருகே வடகொரியா எல்லையையொட்டி அமெரிக்க இராணுவம் போர்த்தளம் அமைத்து அந்த நாட்டு இராணுவத்துடன் பணியாற்றி வருகிறது.

இதனைத் தொடர்ந்து வடகொரிய இராணுவம் அண்டை நாடுகளான தென்கொரியா மற்றும் ஜப்பான் உள்ளிட்டவற்றை அச்சுறுத்தும் வகையில் அணு ஆயுதங்கள் தாங்கிய ஏவுகணைகளை தயாரித்து தொடர் சோதனையில் ஈடுபட்டு வருகிறது.

இதனால் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வடகொரியா மீது பொருளாதார தடை விதித்துள்ளது.

இருப்பினும் வடகொரிய இராணுவம் ஏவுகணை சோதனையில் தொடர்ந்து ஈடுபட்டு அடாவடி காட்டுகிறது.

இதற்கு பதிலடி தரும் வகையில் தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன் அமெரிக்க இராணுவம் கூட்டு இராணுவ பயிற்சியில் ஈடுபடுகிறது.


அமெரிக்காவின் இந்த செயற்பாடு கோபமூட்டி வருவதாக வட கொரியா தலைவர் கிம் ஜாங் உன் கூறி வருகிறார்.

மேலும் தென்கொரியாவை எதிரி நாடாக அறிவித்து அதன் மீது தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் பகிரங்கமாக அறிவித்தார். இதனால் கொரிய தீபகற்ப பிராந்தியம் பதற்றநிலையில் காணப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் வடகொரியாவில் 76 ஆவது நிறுவன ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. தலைநகர் பியாங்யாங்கில் இராணுவ அணிவகுப்புடன் இந்த நிகழ்ச்சி அரங்கேறியது. இதில் வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் தலைமையேற்று இராணுவ மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

பின்னர் அவர் நாட்டு மக்களிடையே உரையாற்றினார். அப்போது கிம் ஜாங் உன் அமெரிக்காவுடன் அணு ஆயுத போருக்கு தயார் என பேசினார். அவர் கூறுகையில், "அமெரிக்காவின் செயற்பாடு நாளுக்கு நாள் அச்சுறுத்தல் அளிக்கும் வகையில் உள்ளது.

இதனால் அமெரிக்காவுடன் எப்போது வேண்டுமானாலும் போருக்கு தயாராக இருக்க வேண்டும். போரில் அதிகளவிலான அணு ஆயுதங்கள் தேவை இருக்கும் என்பதால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)



இதனால் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கடும் கவலை அடைந்துள்ளனர். சுற்றுச்சூழல் பேரழிவிற்கான சாத்தியமாகவும் இதைக் கருதுகின்றனர். (நி)

# பனிப்பாறையுடன் மோதிய சொகுசுக் கப்பல்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்திலுள்ள ஜூனோ நகருக்கு தெற்கே, டிரேசி ஆர்ம் ஃப்ஜோர்டு கடல் வழியாகப் பயணித்த உலகின் மிகப் பெரும் சொகுசு கப்பல்களில் ஒன்றான 'கார்னிவல் குரூஸ்' கடந்த வாரம் ஒரு சிறிய பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளானது.

எனினும் அதிஷ்டவசமாக இந்த மோதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. அத்துடன் கப்பலுக்கும் எந்த சேதமும் ஏற்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கப்பலில் பயணித்த பயணிகள் இந்த தருணத்தை வீடியோ எடுத்து சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளனர்.

இந்த நிகழ்வானது 1912 ஆம் ஆண்டு பனிப் பாறையில் மோதி விபத்துக்குள்ளான புகழ்பெற்ற டைட்டானிக் கப்பல் சம்பவத்தை மீண்டும் நினைவூட்டியுள்ளது. பிரித்தானிய சொகுசு பயணிகள் கப்பலான டைட்டானிக் 1912 ஏப்ரல் மாதம் அதன் முதல் பயணத்தின் போது, இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டனில் இருந்து நியூயோர்க் நகருக்கு புறப்பட்டது. பாரியப் பனிப் பாறையில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் சுமார் 1,500 பயணிகள் மற்றும் கப்பல் பணியாளர்கள் உயிரிழந்ததாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரித உணவுகளால்
## ஏற்படும் ஒவ்வாமை நோய்
## 30 வீத சிறுவர்கள் பாதிப்பு

**(கொழும்பு)**
**துரித உணவு வகைகளை உண்பதால் சிறுவர்களுக்கு அடோபிக் எக்ஸிமா எனப்படும் ஒருவித ஒவ்வாமை நோய் ஏற்படும் எனக் கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் தோல் நோய் வைத்தியர் ஸ்ரீயானி சமரவீர தெரிவித்தார்.**

நாளை நடைபெறவுள்ள உலக அடோ பிக் எக்ஸிமா நோய் தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத் தில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



இலங்கையில், சுமார் முப் பது சதவீத சிறுவர்கள் அடோபிக் எக்ஸிமா எனப்படும் ஒவ்வாமை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த நோயானது மரபணு ரீதியாகப் பரவக் கூடியது என்பதுடன் ஆஸ்துமா, வயிற்றுப்போக்கு மற்றும் மூக்கு ஒழுகுதல் போன்றவை இந்த நோய்க்கான அறிகுறிகளாகும்.

இந்த நோய் அபிவிருத்தி யடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் அதிகமாகக் காணப்படுவதுடன் இளம் பெண்கள் மத்தியிலும் இந்நோய் அபாயம் அதிகம் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# உத்தியோகபூர்வ வாக்காளர்
## அட்டையின்றியும் வாக்களிக்கலாம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டை இன்றியும் வாக்கினைப் பதிவு செய்ய முடியும் என்று மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்ர மணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புகின்றவர்கள் மாத்திரம் அன்றி, உள் நாட்டிலேயே வசிக்கின்ற வர்களும் வாக்காளர் அட்டை இன்றி வாக்களிக்க முடியும்.

வாக்காளர் அட்டை என்பது வாக்காளர்கள் தாங்கள் வாக்களிக்க வேண்டிய தொகுதியை .அடையாளம் காண்பதற்கும் வாக்குச் சாவடியில் தமது தொடரிலக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமே வழங்கப்படுகிறது.

வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தங்களது அடையாள அட்டையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்டரீதியான அடையாள ஆவணங்களைக் காண்பித்து வாக்கினைப் பதிவு செய்ய முடியும்.

அதேநேரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்த ளத்துக்குப் பிரவேசித்து, தமது அடையாள அட்டை இலக்கத்தை வழங்கி தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையின் பிரதியையும் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழிகளில் வாக்காளர்கள் வாக்காளர் அட்டை யின்றியே வாக்களிப்பதற்கான வசதிகள் இருப்பதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்ர மணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார். (ந)

# இன்று ஒரு தகவல் 226



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உயர்வுநவிற்சி

எனக்கு வேண்டப்பட்ட கவிஞர் ஒருவர். அவர் ஒரு நாள் என்னைத் தேடி வந்தார். மிகவும் சோகமாக இருந்தார். என்ன விடயம் என்று விசாரித்தேன். அவர் மனைவி அவரை திட்டி விட்டார்களாம். அதை அவர் எப்படி சொன்னார் தெரியுமா? அவள் தன்னுடைய சொல் அம்புகளால் என்னுடைய இதயத்தைத் துளைத்து விட்டாள் என்றார்.

கவிஞர் அல்லவா அது தான் அப்படி சொன்னார்.

அது சரி நிஜமாகவே அந்த அம்மா அப்படியா செய்தார். உண்மையாகவே இவருடைய இதயம் ஓட்டையாகவா போய் விட்டது. இந்தப் பக்கத்திலே இருந்து எட்டிப்பார்த்தால் அந்த ஓட்டை வழியாக மற்றைய பக்கத்திலே உள்ளது தெரிகிறதா? இல்லைத் தானே.

கவிஞர் அதை மிகைப்படுத்தி சொல்கிறார் அவ்வளவு தான். இலக்கியத்திலே இதை உயர்வு நவிற்சி அணி என்று சொல்கிறார்கள்.

உயர்வுநவிற்சி என்பது இலக்கியத்திலே ஒரு அணி. அப்படி சொல்வதே ஒரு அழகு. கவிதையிலே இப்படிச் சொன்னால் பரவாயில்லை. எல்லா இடங்களிலும் இதை சொல்லிக் கொண்டு இருக்க முடியாது. ஒரு டொக்டரிடம் போய் என் மனைவி சொல் அம்புகளால் என் இதயத்தைத் துளைத்து விட்டாள் என்று சொன்னால் காயம் பலமா லேசா என்று டொக்டர் கேட்பார்.

இப்படி மிகைப்படுத்தி சொல்வது இலக்கியத்திற்கு நன்றாக இருக்கும். விஞ்ஞானத்திற்கு நன்றாக இருக்காது. அறிவியலிலே மிகைப்படுத்தி சொல்கின்ற வேலை இருக்கக் கூடாது. ஏன் என்றால் அவ்வாறு மிகைப்படுத்தி கூறினால் அது தவறாகி விடும்.

ஏன் என்றால் மிகைப்படுத்தல் என்பது உணர்ச்சியின் வெளிப்பாடு. விஞ்ஞான சோதனையிலே உணர்ச்சிக்கு இடமில்லை.

ஒரு விஞ்ஞானி சோதனை செய்கிறார். இரண்டு திரவத்தை ஒன்றாகக் கலக்கிறார். பள பள என்று ஒரு திரவம் உண்டாகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அது எப்படி இருக்கிறது என்பதை உள்ளது உள்ள படியே குறிப்பு எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர அவரே அந்த பளபளப்பில் மயங்கி ஆகா! என் கண்ணையே பறிக்கிறது. இது என்ன பொன்னோ, முத்தோ, வைடூரியமோ! என்று பேச ஆரம்பித்தால் விஞ்ஞானம் என்னஆகிறது. யதார்த்தத்தை விட்டு விலகிப் போனால் உண்மைத்தன்மை சிதைந்து விடும். அறிவியல் அம்சம் குறைந்துபோய்விடும். அதனாலே விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்யும் போது எது எப்படி கிடைக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். அதிலே போய் உணர்ச்சி வசப்பட்டு அதிகப்படுத்தி பேசிக்கொண்டு இருக்கக் கூடாது. ஒரு சோதனை தோல்வி என்றால் தோல்வி தான். கீழே விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை என்கிற மாதிரி பேசிக் கொண்டு இருக்கக் கூடாது.

விஞ்ஞானிகளுக்கும் கவிஞர்களுக்கும் இருக்கிற அடிப்படை வேறுபாட்டை விளக்குவது தான் இன்றைய தகவலுடைய நோக்கம். விஞ்ஞானிகளும் கவிஞர்களும் ஒரே விடயத்தில் சம்பந்தப்பட்டால் சில சிக்கல் வரலாம். அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன்

ஒரு கணவன்– மனைவி கணவர் ஒரு கவிஞர் – மனைவி ஒரு விஞ்ஞானப் பேராசிரியை. அந்தக் கணவர் தன்னுடைய மனைவியுடைய அழகைப் பாராட்டி ஒரு கவிதை எழுதப் போகிறேன் என்று சொன்னார். எதற்கும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்கள் என்று சொல்லி வைத்தேன். இதில் என்ன சேர் எச்சரிக்கை இருக்கிறது. மனைவியைப்பற்றி கணவன் கவிதை எழுதக் கூடாதா. சும்மா இருங்கள் சேர் என்று சொல்லி விட்டு போனார்.

இரண்டு நாள் கழித்து மிகவும் வேகமாக என்னிடம் திரும்பி வந்து சேர் நீங்கள் சொன்னது தான் சரி. நான் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருந்திருக்கலாம் என்றார்.

என்ன நடந்தது என்று விசாரித்தேன். ஒன்றுமில்லை சேர் பெண்களுக்கு இடை மெலிந்து இருப்பது அழகு தான். பல கவிஞர்கள் அதை நூலிடை என்று ஏற்கனவே பாடியிருக்கிறார்கள். நான் இன்னும் ஒரு படி மேலே போய் "இல்லாத அவள் இடையை" என்று எழுதினேன்.

அதாவது இடை என்ற ஒன்று இல்லை என்று எழுதினேன். அதைப் படித்து விட்டு என்னுடைய மனைவி சண்டைக்கு வந்து விட்டார் சேர் என்று சொன்னார். மனைவியை கூட அவர் இவர் என்று தான் சொல்லுவார் அவ்வளவு மரியாதை. ஏன் என்று கேட்டால் எனக்கு இடையே இல்லை என்று எழுதி இருக்கின்றீர்களே. அப்போ நான் என்ன இரண்டு துண்டாகவா இருக்கின்றேன் என்று கேட்டு கத்த ஆரம்பித்து விட்டார்.

நான் மெதுவாகச் சமாதானப்படுத்தி இல்லை என்று சொன்னால் உண்மையாகவே இல்லை என்று நினைத்து விடக்கூடாது என்று சொல்லி விளக்கம் கொடுத்தேன். சரி என்று ஒத்துக் கொண்டார். மறுநாள் காலையிலே சாப்பிட உட்கார்ந்தேன். வெறும் தட்டை கொண்டு வந்து வைத்து சாப்பிடுங்கள் என்று சொன்னார்.


இட்லி வைக்கவில்லையா என்று கேட்டேன் . இல்லை என்றார்.

ஏன் இப்படி சொல்றீங்க என்று கேட்டேன்.

இல்லை என்று சொன்னால் நிஜமாகவே இல்லை என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. இருக்கிறதாக நினைத்து சாப்பிடுங்க என்று சொல்லி விட்டு போய் விட்டார் சேர் என்று [illegible] விட்டார். அறிவியலும் அழகியலும் மோத ஆரம்பித்தால் அதனுடைய நிலைமை இப்படி தான் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட வீடுகளில்
## இதுவரை குடியேறாத பயனாளிகள்
### நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைப்புகள் வலியுறுத்து



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட பல நிரந்தர வீடுகளில் குடும்பங்கள் வசிக்காதது தொடர்பாக முல்லைத்தீவு. மாவட்டச் செயலகம் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனப் பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன.

2009 ஆம் ஆண்டின் பின்னர் மீள் குடியேற்றத்தின் போது நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டன. பல்வேறு காரணங்களைக் கூறி நிரந்தர வீடுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் வீடுகளில் வசிக்காததன் காரணமாக வீட்டின் சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அயலில் உள்ளவர்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பாகக் கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலாளர்களுக்கு பொது அமைப்புகள் தகவல்கள் வழங்கிய போதிலும் கடந்த 15 ஆண்டுகளில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை. (நி-350)




முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த அமரர் திரு.திருமதி அருள்ராஜாவின் ஞாபகார்த்தமாக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக ஐந்து சக்கரநாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று நடைபெற்றதுடன் மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் பீ.தன்சயனிடம் சக்கரநாற்காலிகளைக் கையளித்தனர்.

# சிறுவர் உரிமைகளை
## பாதுகாக்கக் கோரி நடைபவனி





(முல்லைத்தீவு)

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கக் கோரி விழிப்புணர்வு நடைபவனியானது ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு நாம் சிறுவர் எம்மை காப்பீர் எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு பேரணியினை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ம.வினோத் ஆரம்பித்து வைத்திருந்தார்.

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு மன்னிப்பு இல்லை, குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்திற்காக நாம் நமது நிகழ்காலத்தை தியாகம் செய்வோம், அமர்த்தாதே அமர்த்தாதே சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாதே, சிறுவர்களுக்கான சிறுவர் நேய முள்ளதும் பாதுகாப்பு மிக்கதுமான சூழலொன்றை கட்டியெழுப்புவோம், அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, என்னை திட்டாதீர்கள் நான் சின்னப் பிள்ளை, வன்முறைகளில் இருந்து சிறுவர்களை நாம் பாதுகாப்போம் போன்ற பல்வேறு பதாதைகள் தாங்கிய விழிப்புணர்வு பதாதைகளுடன் நடைபவனி இடம்பெற்றிருந்தது . (நி-299)

# தேர்தல் முன்னாயத்த
## செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல்



(முல்லைத்தீவு)

ஜனாதிபதித் தேர்தல் முன்னாயத்த செயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட வகையில் நடைபெற்றுவருகின்றன.

இதன் செயற்பாடாக முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் காரியாலயத்தினால் நேற்று முன்தினம் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான கலந்துரையாடல் பி.ப 2.00 மணிக்கு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகரும் மாவட்ட அரசாங்க அதிபருமான அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், தேர்தல் திணைக்களத்தின் அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்டத்தின் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (நி)

# கிளி.மாவட்ட செயலகத்தில்
## இடம்பெற்ற விவசாய குழுக்கூட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் இக் கூட்டத்தில் முன் கொண்டு வரப்பட்டு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

மேலும் கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக பயிர் செய்கையினை முறையான பொறிமுறையின் கீழ் கொண்டு வருவதற்கான விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு கல்மடுக்குளம் குடமுருட்டிக் குளம் ஆகியவற்றின் சிறுபோக பயிர்செய்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட செயலக துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் விடயதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் அங்கத்தவர்கள், மாவட்ட விவசாயப் பிரிவின் உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (நி-315)

# முக்கொம்பனில் இருந்து துணுக்காய்க்கு பேருந்து சேவை நடத்துங்கள்
## பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பனுக்கு காலையில் வருகின்ற இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தினை முல்லைத்தீவின் துணுக்காய் வரை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலையில் யாழ்ப்பாணம் பொன்னாலையில் இருந்து சேவையை தொடங்கும் பேருந்து மல்லாகம், சுன்னாகம், கைதடி, சாவகச்சேரி, பூநகரி, முக்கொம்பன் வரை சென்று மீண்டும் இப்பேருந்து கிளிநொச்சிக்கு செல்கின்றது.

குறித்த பேருந்தினை பேருந்து சேவைகள் நடைபெறாத ஸ்கந்தபுரம், அக்கராயன், முல்லைத்தீவின் அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், ஆலங்குளம், துணுக்காய் வரை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் கடந்த 15 ஆண்டுகளாகப் பேருந்து வசதிகள் இல்லாமல் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள முல்லைத்தீவின் துணுக்காயின் கிராமங்கள் நன்மையடையும்.

முக்கொம்பன் மகா வித்தியாலயம், அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், முல்லைத்தீவின் அம்பலப்பெருமாள்குளம் பாடசாலை, கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலயம், தென்னியங்குளம் பாடசாலை, உயிலங்குளம் பாடசாலை, ஆலங்குளம் பாடசாலை, துணுக்காய் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் போக்குவரத்து நன்மையடைவார்கள்.

இதனை விட மல்லாவி ஆதாரவைத்தியசாலை, அக்கராயன் பிரதேச வைத்தியசாலை, துணுக்காய் வைத்தியசாலை, துணுக்காய் பிரதேச செயலகம் என்பவற்றிற்கும் மக்கள் பேருந்துகளில் பயணிக்க முடியும்.

இதனைக் கருத்திற் கொண்டு குறித்த வழித் தடத்தில் முக்கொம்பனுக்கு வருகை தரும் பேருந்தினை துணுக்காய் வரை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 579





மதுராந்தகத்தேவரும் அவருடைய பரிவாரங்களும் அரண்மனை வீதியை அடைந்து, செம்பியன் மாதேவியின் மாளிகையை அடைந்தார்கள். அரண்மனை வாசலிலேயே பெரிய பிராட்டி நின்று கொண்டிருந்தார். யாரையோ வரவேற்பதற்கு ஆயத்தமாக அவர் காத்திருந்ததாய்த் தோன்றியது. மதுராந்தகர் ரதத்திலிருந்து இறங்கி அன்னையின் அருகில் சென்று வணங்கினார்.

வணங்கிய மதுராந்தகரை உச்சி முகந்து அன்னை ஆசி கூறினார். "மகனே! நல்ல தருணத்தில் வந்து விட்டாய்! திருநாரையூர் நம்பி வந்து கொண்டிருக்கிறார். அவசியமானால் சற்றுச் சிரம பரிகாரம் செய்து கொண்டு விரைவில் சபாமண்டபத்துக்கு வந்து சேர்!" என்று கூறினார்.

மதுராந்தகரின் முகம் பொலிவு இழந்ததை வந்தியத்தேவன் கவனித்துக் கொண்டான். பாவம்! தம்மை வரவேற்பதற்காகவே பெரிய பிராட்டி அரண்மனை வாசலில் காத்திருந்ததாக மதுராந்தகர் எண்ணியிருந்தார் போலும். என்ன ஏமாற்றம்? பல்லக்கிலே பின்னால் ஊர்வலமாக வரும் சிவனடியாரை வரவேற்பதற்குத்தான் அவர் காத்திருந்தார் என்று தெரிந்ததும் மதுராந்தகருக்கு, நாளைக்குச் சோழ சிம்மாசனத்தில் ஏறலாம் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருப்பவருக்கு, மிக்க ஏமாற்றமாயிருப்பது இயல்புதானே?

அரண்மனையில் மதுராந்தகருக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த பகுதிக்கு எல்லாம் சென்றார்கள். மதுராந்தகர் உடை மாற்றுதல் முதலிய காரியங்களைச் சாவகாசமாகவே செய்து கொண்டிருந்தார். சபாமண்டபத்துக்குப் போக அவ்வளவாக ஆர்வம் கொண்டிருந்ததாய்த் தெரியவில்லை. அன்னையிடமிருந்து ஆள் மேல் ஆள் வந்து கொண்டிருந்தனர். கடைசியாக மதுராந்தகர் புறப்பட்டார். புறப்பட்டபோது, "அந்த நிமித்தக்காரன் எங்கே?" என்று வினவினார். அவருடன் சபாமண்டபத்துக்குப் போகத் துடிதுடித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன், "இதோ ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான். அவனையும் இன்னும் சிலரையும் அழைத்துக்கொண்டு மதுராந்தகர் சபாமண்டபம் போய்ச் சேர்ந்தார்.

மண்டபத்தில் ஏற்கனவே சபை கூடியிருந்தது. ஒரு பக்கத்தில் செம்பியன் மாதேவியும், குந்தவைப் பிராட்டியும், மற்றும் சில அரண்மனைப் பெண்களும் வீற்றிருந்தார்கள். சபையில் நடுநாயகமாகப் போட்டிருந்த பீடத்தில் ஒரு வாலிபர் அமர்ந்திருந்தார். அவர் இளம் பிராயத்தவர். விபூதி ருத்ராட்சதாரி, அவருடைய திருமுகம் களையுடன் பொலிந்தது. அவர் எதிரில் ஓலைச் சுவடிகள் சில கிடந்தன. கையிலும் ஓர் ஓலைச் சுவடியை அவர் வைத்துக் கொண்டிருந்தார்.

அவர் அருகில் விபூதி ருத்ராட்சதாரியான பெரியவர் ஒருவர் பரவசமாக நின்றார். இன்னும் சபாமண்டபத்தில் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். இளைஞர் பல்லக்கில் வந்தவர்தான் என்பதையும், பக்கத்திலே நின்றவர் முன்னொரு தடவை தான் கொள்ளிடத்துப் படகில் பார்த்தவர் என்பதையும் வந்தியத்தேவன் கண்டு கொண்டான்.

அவனுடைய கண்கள் சபாமண்டபத்தில் அங்குமிங்கும் சுற்றிச் சுழன்றாலும், கடைசியில் பெரிய பிராட்டிக்கு அருகில் வீற்றிருந்த குந்தவையின் திருமுகத்திலேயே வந்து நின்றன. குந்தவை தேவியின் கண்களோ முதல் முறை அவனைப் பார்த்ததும் வியப்புக்கு அறிகுறியைக் காட்டின. பிறகு அவன் பக்கம் இளவரசியின் கண்கள் திரும்பியதாகவே தெரியவில்லை. தன்னை ஒரு வேளை தெரிந்து கொள்ளவில்லையோ என்று கூட அவனுக்கு ஐயம் உண்டாயிற்று.

மதுராந்தகர் சபா மண்டபத்தில் பிரவேசித்ததும் பெண்மணிகளை தவிர மற்றவர்கள் எழுந்து மரியாதை செய்தார்கள்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## புரட்சிப் பெண்

ஒரு கிராமத்தில் ஓலைக்குடிசை ஒன்றில், ஏழு வயதான சிறுமி பாடம் படித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது கிராம அதிகாரி வந்து "உன் அம்மா, அப்பா எங்கே?" என்று கேட்டார்.

"அம்மா பசுவைத் தேடிச் சென்றிருக்கிறாள். அப்பா முதலாளி வீட்டுத் தோட்டத்துக்குப் போயிருக்கிறார்" என்றாள் சிறுமி.

"வரும் ஞாயிற்றுக் கிழமைக்குள் வரிப் பணத்தைக் கொண்டு வந்து தரவில்லையானால் பசுவைப் பிடித்துக் கொண்டு போய் விடுவேன்." என்று கடுமையாகக் கூறினார் கிராம அதிகாரி.

"எங்கள் வீட்டுப் பசுவைப் பிடித்துக் கொண்டு போவதற்கு நீங்கள் திருடரா?" என்று கேட்டாள் சிறுமி.

"சிரித்துக் கொண்டே, மக்குப் பெண்ணே! நான் திருடன் [illegible] திருடன் சொல்லி[illegible]டுத் திருட மாட்டான்" என்றார் கிராம அதிகாரி.

"பிறகு, ஏன் எங்கள் பசுவைக் கொண்டு போக வேண்டும்?" என்று கேட்டாள் சிறுமி.

"அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரி செலுத்தாதனால் உங்கள் பசுவைக் கொண்டு போவேன்" என்றார் அதிகாரி.

"வரி என்றால் என்ன? அரசாங்கம் ஏன் வரி போடுகிறது? அரசாங்கத்திடம் பணம் கிடையாதா? அது எங்களைப் போல் ஏழையா?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டாள் சிறுமி.

"[illegible] மக்கள் நன்மைக்காகவே, மருத்துவ உதவி, கல்வி வசதி, போக்குவரத்துக்காக சாலை போடுதல், பாலம் அமைப்பது, கலவரம், திருட்டு நடக்காமல் பாதுகாப்பது, ஊழியர்களுக்குச் சம்பளம், இப்படியாக பல தேவைகளுக்கு அரசாங்கத்துக்கும் பணம் தேவைப்படுகிறது. அதற்காகவே வரி போடப்படுகிறது" என்றார் அதிகாரி.

"எங்கள் தேவைகளை நாங்களே பார்த்துக் கொள்கிறோம். அரசாங்கம் எதுவும் எங்களுக்குச் செய்ய வேண்டாம், அதனால் நாங்கள் வரி செலுத்த மாட்டோம்" என்றாள் சிறுமி

"வயதான பின்னர் நீ எல்லாவற்றையும் தெரிந்து கொள்வாய், இப்பொழுது விளக்கிச் சொல்ல இயலாது. உன் அம்மா வந்ததும் கிராம அதிகாரி வந்தார் என்று சொல்" என்று கூறி புறப்பட்டார்.

"இந்தப் பெண் பெரியவளானபின் ஒரு புரட்சிக்காரியாக ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை" என்று நினைத்துக் கொண்டார்.

உலகில் அரசியல், கல்வி, சமூகம் ஆகியவற்றில் பல புரட்சிப் பெண்கள் தோன்றியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும்போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விபத்தைத் தடுப்பதாயின் மகேசன் தீர்ப்பு அவசியமாகிறது

விபத்து மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. கடந்த 10ஆம் திகதி கூட, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அண்மையாக ஆடியபாதம் வீதியில் டிப்பர் வாகனம் மோதியதில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்து போனார்.

முன்பெல்லாம் ஒரு மாணவி விபத்தில் மரணமடைந்தால்; ஆசிரியர் சங்கங்கள் கண்டனம் தெரிவிக்கும். அதிபர் சங்கங்கள் வேதனை வெளியிடும். ஏன்? மாணவர் அமைப்புகள் விபத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கும். ஆனால் இப்போது அவை எதுவும் இல்லை.

தவிர, விபத்து நடந்ததும் ஓடிச் சென்று காயப்பட்டவரைத் தூக்கி அவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கின்ற மனிதாபிமானம் மரத்துப் போயிற்று.

1990 என்ற இலக்கத்துக்கு அறிவித்துவிட்டு அம்புலன்ஸ் வண்டி வரும்வரை, விபத்தில் படுகாயமடைந்தவரை – விபத்தில் உயிரிழுந்தவரை கையடக்கத் தொலைபேசியில் வீடியோ எடுப்பது மட்டும் நடந்தாகும்.

அதேநேரம் வீதி முழுவதும் சனக்கூட்டம். அதில் சிலர் விபத்தைப் பற்றிய விவரணத்தைச் செய்து கொண்டிருப்பர்.

மற்றும்படி விரைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றால், அந்த உயிரைக் காப்பாற்ற முடியும் என்ற நிலைமை இருந்தாலும் அதனைச் செய்வதற்கு யாருமே தயாரில்லை.

என்ன செய்வது, விபத்தில் படுகாயமடைந்தவர் துடிதுடித்துக் கொண்டிருப்பார். யாராவது என்னைக் காப்பாற்ற மாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டிருப்பார்.

ஆனால் மனிதத்தை இழந்த மனிதர்கள் சம்பவம் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

இஃது ஒருபுறம் நடந்தாக, விபத்தை ஏற்படுத்தியவர் சம்பவ இடத்தில் இருந்து சற்று விலத்தி நின்று; தனது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தொலைபேசியில் சம்பவத்தைக் கூறுவார்.

அவ்வளவுதான் அவரிடம் ஒரு பட்டாளம் வந்து சேரும். சண்டித்தனம் வெளிப்படும். அதில் முக்கிய புள்ளிகள் தமக்குத் தெரிந்த பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்து உங்களைக் கவனிக்கலாம். நீங்கள் தான் இதை வெட்டி ஆடவேணும் என்பர்.

பிறகென்ன ஒரு பெருந்தொகை கைமாற, குறித்த விபத்துச் சம்பவம் அப்படியே அமுங்கிப் போகும்.

விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பம் முழு இழப்பையும் சுமந்து கண்ணீரும் கம்பலையுமாக அலையும்.

விபத்தின் மூலம் மரணத்தை ஏற்படுத்திய சாரதி மீண்டும் சிறந்த சாரதியாக வீதிகளில் சஞ்சரிப்பார்.

ஆக, உயிரைப் பறிக்கின்ற இந்த விபத்தைத் தடுக்க வேண்டுமாயின், மக்கள் ஒன்று திரண்டு நியாயம் கேட்க வேண்டும். உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் மறுத்தால், அந்த இடத்தில் மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பாக இருக்க வேண்டும்.

# எந்தப் பிரதான கட்சித் தலைவருடனும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை

## தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற ரீதியில் என்னை எந்த பிரதான கட்சித் தலைவர்களும் பேசுவதற்காக அழைக்கவில்லை. அவ்வாறு அழைத்தாலும் நான் செல்லப் போவதும் இல்லை என தமிழ்ப் பொது வேட்பாளர்பா. அரியநேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பின் வெற்றியை அல்லது இலக்கை உடைப்பதற்கு இப்போது பல சக்திகள் இறங்கியுள்ளன.

இந்த நபர்களினால் இன்னும் சில தினங்களில் அல்லது தேர்தலுக்கு முதல் நாளிலோ என்னைப் பற்றி துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்படலாம். நான் தேர்தலில் இருந்து ஒதுங்கி விட்டேன் என்று கூட அவர்களால் துண்டுப் பிரசுரங்கள், காணொளிகளை வெளியிடலாம்.

இவை எதையும் மக்கள் நம்ப வேண்டாம். தமிழ் மக்களுக்கு நான் ஒன்று கூறுகின்றேன். நீங்கள் குழப்பமடையத் தேவையில்லை, விருப்பு வாக்கு, விருப்பத் தேர்வு என்கின்ற விடயத்தில் பலர் மக்களை குழப்பமடையச் செய்து வருகின்றனர்.

மக்களாகிய நீங்கள் எனது சங்கு சின்னத்திற்கு மட்டும் ஒரு புள்ளடி இடுங்கள் அவ்வளவுதான். இன்று இந்த பொது வேட்பாளர் என்கின்ற விடயம் இலங்கையில் மட்டுமல்ல இந்தியா உள்ளிட்ட சில நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏன் என்றால் எங்கள் விடுதலைப் போராட்டத்தில், அகிம்சை ரீதியிலான, ஆயுத ரீதியிலான இராஜதந்திர செயற்பாட்டிலே கூர்மை பெற்ற போது எல்லோருமே இதை அவதானித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

அவர்கள் எல்லோருமே தவறு விட்டிருக்கின்றார்கள். இலங்கை மட்டும் எங்களை ஏமாற்றவில்லை இந்தியாவும் எங்களை ஏமாற்றி இருக்கின்றது. இறுதிப் போரில் இனப்படுகொலையை செய்வதற்காக பல நாடுகள் இலங்கைக்கு துணை போயிருக்கின்றன.

எனவே, அவர்கள் அனைவருக்கும் ஒரு மனச்சாட்சி இருக்கின்றது. இணைந்த வடக்கு கிழக்கிலே ஒரு அரசியல் தீர்வை தமிழர்களுக்கு வழங்க அவர்கள் தவறியிருக்கின்றார்கள். அந்த தவறை சுட்டிக் காட்ட வேண்டிய உரிமை வடக்கு கிழக்கு மக்களுக்கு இருக்கின்றது.

அதை ஒரு ஜனநாயக வடிவமாக நாங்கள் காட்ட இருக்கின்றோம். தமிழ் தேசிய பொது கட்டமைப்பின் வேட்பாளராக நான் வரவேண்டும் என்று ஆசைப்படவில்லை.

வேட்பாளராக என்னை தெரிவு செய்வதற்கு முன் நானே இரண்டு பேரை வேட்பாளராக முன்மொழிந்தேன். இறுதியாக சில மாற்றங்கள் ஏற்பட்டதன் காரணமாக நான் இதை ஏற்றிருக்கின்றேன்.

அனைவரும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் தமிழரசுக் கட்சியில் இருந்து வேறு அரசியல் கட்சியில் போட்டியிடுவது தமிழரசு கட்சியை விட்டு விலகிச் செல்வதாக கருதப்படலாம்.

நான் இன்னுமொரு கட்சியில் அங்கத்துவம் பெறவில்லை. இப்பொழுதும் தமிழரசுக் கட்சியில் தான் இருக்கின்றேன். நான் தமிழ் தேசிய கொள்கையுடையவன் கட்சியின் கொள்கையை நான் ஏற்றுக் கொள்கிறேன், அதே போன்று எனது தமிழ் தேசிய கொள்கையினையும் கட்சி ஏற்றுக் கொள்ள வேீண்டும்” என தெரிவித்துள்ளார். (ம-7)

## வவுனியா இ.போ.சபையினர் நேற்று பணிப்புறக்கணிப்பு

(வவுனியா)

தமது ஊழியர்களை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் கடமையில் இருந்த அரச பேருந்தின் நடத்துனர் மற்றும் ஊழியர்கள் மீது வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் தனியார் பேருந்தின் ஊழியர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தால் அரச பேருந்துத்தரப்பினை சேர்ந்த ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யுமாறு தெரிவித்து போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் நேற்று காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, தமது கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் வட மாகாண ரீதியாக பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படும் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பணிப்புறக்கணிப்பு காரணமாக பயணிகள்பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இந்தியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றவர் கட்டுநாயக்கவில் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தின் காத்திருப்பு பகுதியில் இருந்த விமானமொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து இந்தியாவிற்கு தப்பிச்செல்ல முயன்ற இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளால் நேற்று (12) கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று வியாழக்கிழமை (12) அதிகாலை 03.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்று, விமான நிலையத்தின் காத்திருப்பு பகுதியில் இந்தியாவின் சென்னை நகரத்தை நோக்கிப் பயணிக்கவிருந்த விமானமொன்றிற்குள் அத்துமீறி நுழைந்துள்ளார்.

இதனையடுத்து, விமான நிலைய அதிகாரிகள் அனைவரும் இணைந்து சந்தேக நபரை கைது செய்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர் இரு தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ள நிலையில் இவர் இறுதியாக இந்தியாவின் சென்னை நகரத்திற்கு சென்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நேற்று (12) நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(ம-7)

## பேருந்து - ஆட்டோ மோதி விபத்து

### பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

பாதுக்க - வட்டரக பிரதேச வீதியில் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று பின்னால் வந்த பேருந்துடன் மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டியின் சாரதியும், முச்சக்கரவண்டியில் பயணித்த பெண்ணும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுக்க பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இதேவேளை பேருந்தின் சாரதியும் காயமடைந்த நிலையில், பாதுக்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

11

மக்களில் பெரும்பான்மையினர் அனுமதித்தால் சட்ட முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அரசியலமைப்புத் திருத்தம் அல்லது சர்வதேச ஒப்பந்தங்க ளுக்கு வருதல் ஆகியவைகளுக்கு கட்டாயம் மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்படல் வேண்டும்.

இவ்வாறான நிலைமைகளில் இரட்டைப் பெரும்பான்மையொன்று தேவைப்படுகின்றது. இரட்டைப் பெரும்பான்மை என்பது கன்டனின் பெரும்பான்மை மக்களும் நாட்டு மக்களின் பெரும்பான்மையினரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்வ தையே குறிக்கும்.

### இணக்கப்பாட்டு ஜனநாயமும் கன்டன்களும்

● கூட்டு நிர்வாகத்திற்கான ஒழுங்கு முறைகளுக்கு மேலதிக மாக மத்திய அரசின் கொள்கை களில் தொடர்புறுவதற்குக் கன்டன் களுக்கு வேறு முறைகளும் காணப் படுகின்றன. "இணக்கப்பாட்டு ஜன நாயகவாதமே" (Consunsus Democracy) அடையாளம் காணத் தக்க விதிமுறையாக உள்ளது. அந்நாடு சட்டத்தை விதிக்கும் போது அரசியல் கட்சிகள், அழுத்தம் கொடுக்கும் குழுக்கள் என்பன கன்டன் மற்றும் மத்திய சட்ட உருவாக்கத்தின் போது மிக நெருங் கியதாக எடுக்கப்படும் உடன்பாடு களின் விளைவு என்பதே இதன் கருத்தாகும். நேரடிச் ஜனநாய கவாத பிரயோகங்களே இதற்கான காரணமாகும்.

● அந்நாடு நிறைவேற்றுத் துறை இணக்கப்பாட்டு ஜனநாயகத் திற்கான சிறந்த உதாரணமாகும். சமஷ்டி கவுன்சில் எனும் கூட்ட ரசுப்பேரவை (கூட்டு நிறைவேற் றுத்துறை) என்பதே அங்குள்ள நிறைவேற்றுத்துறையாகும். இது சமஷ்டி பிரதிநிதிகள் 7 பேரைக் கொண்டுள்ளது. அவ்வெழுவரும் இருசபைகள் மூலம் தெரிவு செய் யப்படுவர். இவர்களே ஏழு அமைச் சுக்களின் அமைச்சர்களாவர்.

அவ்வேழு நபர்களில் இருந்து சமஷ்டி நிறைவேற்றுநர் தெரிவு செய்யப்படுவார். இதுவே கூட்டு நிறைவேற்றுக் குழு என அழைக் கப்படுகின்றது.

● அரசாங்கம் தீர்மானமெடுக் கும்பொழுது அவ்வேழு நபர்களுக் கும் சமமான வாக்கு கிடைக்கும். இதன் தலைவர் சமமானவர்களி டையே முதன்மையானவர் மட் டுமே என்பதே இதன் பொருளாகும். கூட்டிணக்கப்பாடொன்று ஏற்படு வதே இதன் விளைவாகும்.

### நீதிமன்றமும் கன்டன்களும்

● கன்டனிடம் காணப்படும் அதிகாரத்தை முன்னெடுத்துச் செல வதற்கு அந்நாட்டின் நீதிமன்ற முறையும் காரணமாக அமைந்துள் ளது. சுவிட்சர்லாந்து நீதிமன்ற முறை ஏனைய சமஷ்டி முறைகளில் இருந்து வேறுபட்டதாகும்.

● வேறு சமஷ்டி அரசுகளைப் போன்று மத்திய அரசின் நடவடிக் கைகளுக்கும் மாநில அரச நடவடிக் கைகளுக்கும் தனித்தனியான நீதி மன்றங்கள் காணப்படவில்லை. இங்கு கன்டன்கள் உருவாக்கிய நீதிமன்றங்களே காணப்படுகின் றன. அவற்றிற்கு கன்டன் சட்டத்தை யும் சமஷ்டிச் சட்டத்தையும் பொருள் கோடல் செய்யும் அதிகாரம் உண்டு.

● சமஷ்டி உயர் நீதிமன்றம் கன்டன்களில் இருந்து கிடைக் கப்பெறும் மேன்முறையீடுகளை யும், மத்திய அரசாங்கத்தின் விட யத்துறைகள் தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மட்டுமே பங்குகொள்கின்றது.

### பிரதேச அரசியலும் சுவிஸ் சமஷ்டி முறையும்

● சுவிஸ் பிரதேச அரசாங்கம் (Local Government) ஆட்புல ரீதியாகவும் சனத்தொகைக்கு ஏற் பவும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட தாகும். கன்டனைப் போன்று பிரதேச அலகுகளும் (உள்ளூராட்சி மன் றங்கள்) சட்டத்தின் மூலம் பாது காக்கப்பட்டிருப்பது அந்நாட்டில் காணப்படும் விசேட பண்பாகும்.

● அவற்றிற்குத் தமது ஆட்புலத் திற்குட்பட்ட சட்ட ரீதியான உரிமை காணப்படுவதுடன் அவை சுயாதீ னமாக அல்லது ஏனையவற்றுடன் இணைந்து செயற்படவும் முடியும்.

● இதன்படி கன்டன்களால் உள்ளூராட்சி விடயங்கள் தொடர் பில் வரையறைகளை ஏற்படுத்த முடியாது. இவ்வாறு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் கன்டன்க ளுக்கு இணையான உரிமைக் காணப்படுகின்றது.

### சுவிட்சர்லாந்து சமஷ்டி முறை உலக சமஷ்டி முறைகளில் இருந்து வேறுபடும் விதம்

சுவிட்சர்லாந்து அரசாங்கம் மூன்று தளங்களை உள்ளடக் கியுள்ளது.

1. மத்திய அரசு
2. மண்டலம்
3. உள்ளூராட்சி சபைகள்

இம்முறையில் மத்திய அரசு வரை கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் ஒத்துழைப்பு முறை ஒன்றினூடாக ஏறுவரிசை எனும் (Bot tom Up)) தன்மை ஏற்படக் கூடிய முறையொன்று காணப்ப டுகின்றது. நிலைக்குத்து மற்றும் கிடையான ஒத்துழைப்பை மூன்று அரசியல் தளங்களிலும் காணக் கூடியதாக உள்ளது. இதனை அதி காரம் பகிரப்பட்டிருக்கும் முறை மைக்கு ஏற்ப புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

கொம்யூன் எனும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதேச மட்டத்தில் சேவைகளைப் பகிரக்கூடிய தன் னாதிக்கம் கொண்ட நிறுவனமா கும். பிரதேச மக்களின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய சகல பொறுப்புக்களும் இதற்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

உதாரணம் : பிரதேச வீதிகளை நிர்மாணித்தல், கண்காணித்தல், வாயு மற்றும் நீர் வழங்கல், கழி வகற்றல், ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் மற்றும் பாடசாலைகளை உருவாக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தமது ஆதாரத்திற்கான அதிகா ரங்களையும் பொறுப்புக்களையுமே கன்டன்கள் தக்கவைத்துக் கொண் டுள்ளன. உதாரணம்: கலாசாரம், மொழி, கல்வி, சமயம், சமூகக் கொள்கைகள், சுகாதாரம், சமூக சேவைகள் போன்றவற்றைக் குறிப் பிடலாம்.

தேசிய இறைமையோடு நேர டித்தொடர்புறும் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்குரியதாகும். உதா ரணம்: இராணுவம், நிதிக் கொள்கைகள், வெளிநாட்டுத் தொடர் புகள், சமூகப் பாதுகாப்பு, சூழல், வலுச்சக்தி, உட்கட்டமைப்பு வசதி கள் போன்றவற்றைக் குறிப்பிட லாம்.

**சுவிட்சர்லாந்தில் ஒவ்வொரு அலகிடமும் காணப்படும் அதிகாரங்கள்**

| அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய சமஷ்டி சுவிஸ் அரசியல் முறை | கன்டன் அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய கன்டன் அரசாங்கம் | கன்டன்கள் மூலம் விதிக்கப்பட்ட சட்டத்திற்கமைய கம்யூனுக்குக் காணப்படும் அதிகாரம் |
|---|---|---|
| - சமஷ்டி அதிகார அமைப்பு<br>- வெளிநாட்டு நடவடிக்கைகள்<br>- படையும் சிவில் பாதுகாப்பும்<br>- தேசிய பெருந்தெரு<br>- அணு சக்தி<br>- தபால் மற்றும் தொலைத் தொடர்புகள்<br>- நிதிக் கொள்கைகள்<br>- சமூகப் பாதுகாப்பு (ஓய்வு முறை)<br>- சிவில் மற்றும் குற்றவியல் சட்டம்<br>- கல்வி, தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்<br>- வலுச் சக்திக் கொள்கை<br>- சூழல் பாதுகாப்பு<br>- பிரஜாவுரிமை<br>- சமஷ்டி வரிகள் | - கன்டன் அதிகார நிறுவன அமைப்பு (தமது யாப்பிற்கமைய)<br>- கன்டன் கீதம், கொடி<br>- கன்டன்களுக்கிடையான ஒத்துழைப்பு<br>- பொலிஸ்<br>- கலாசாரம்<br>- பொதுமக்கள் சுகாதாரம்<br>- கன்டன் பெருந்தெரு<br>- வனம், நீர் மற்றும் இயற்கை வளங்கள்<br>- கல்வி (இடைநிலை)<br>- பாடசாலை, பல்கலைக் கழகம்<br>- சூழல் பாதுகாப்பு<br>- இயற்கை, மரபுரிமை பாதுகாப்பு<br>- கன்டன்களுக்குரிய வரி | - கல்வி (முன்பள்ளி மற்றும் அடிப்படைக் கல்வி)<br>- கழிவகற்றல் முகாமைத்துவம்<br>- கொம்யூன் மட்டப் பாடசாலைகள்<br>- பிரதேச உட்கட்டமைப்பு<br>- பிரதேச பொலிஸ்<br>- பிரஜாவுரிமை<br>- நகர வரி |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுரவை...

திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுர குமார திஸாநாயக்க இனக் குழுக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தியதாகக் குற்றம் சுமத்தி தேசப்பற்றுள்ள மக்கள் சக்தியினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட கருத்துக்களால் இன முரண்பாடுகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகக் கட்சியின் பொதுச் செயலாளர் சுகத் ஹேவாபத்திரன குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மகிந்தவை...

திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் வெற்றிக்காக ஹிரியாலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று அநுர குமார திஸாநாயக்க, மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை நீக்கி உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேற்றினால் அவரின் பாதுகாப்புக் கேள்விக்குறியாகிவிடும்.

காலி முகத்திடல் தாக்குதல் இடம்பெற்ற மே ஒன்பதாம் திகதி அலரி மாளிகையில் வைத்து மகிந்த ராஜபக்ஷவை கொல்வதற்கான ஆயத்தங்கள் இருந்தன.

எனினும், திருகோணமலை கடற்படை முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டு அவர் உயிரைக் காப்பாற்றியதாக திஸ்ஸ குட்டியாராச்சி மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## எதிர்வரும்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில பல்வேறு மட்டங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுதல், நிதி வழங்குதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது மேலும் தெரிவித்தார். (ம-7)

## யாழ்.போதனா...

களின் தந்தையே உயிரிழந்தவராவார்.

காய்ச்சல் காரணமாகக் கடந்த 3ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7)

## தெல்லிப்பழை...

கொழும்பில் வசிக்கும் குறித்த நபர் தெல்லிப்பழையில் உள்ள தங்கையின் வீட்டுக்கு வருகை தந்துள்ளார். நெஞ்சு வலிக்கிறது எனத் தங்கையிடம் தேநீர் கேட்டுள்ளார். தேநீருடன் வந்து பார்க்கும்பொழுது குறித்த நபர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7)

## ஏனைய...

ஐக்கிய மக்கள் சக்தியின் பிக்குகள் ஆலோசனைப் பேரவையின் தேசிய மாநாட்டில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும்கருத்துத்தெரிவித்த அவர், மகா சங்கத்தினரதும் ஏனைய மதத் தலைவர்களினதும் ஆலோசனைகளினதும் அறிவுரைகளினதும் ஊடாக அரசாட்சி ஒன்று இடம்பெற வேண்டும்.

இன்று எமது நாடு பலவிதமான சவால்களை எதிர்கொள்கின்றது. கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் செயலிழந்து மக்களுடைய வாழ்க்கைத்தரம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

நாட்டிற்கான சவால்கள் வருகின்ற போது வரலாறு நெடுகிலும் மகா சங்கத்தினரே ஆலோசனை வழங்கி இருக்கின்றனர் என்றார். (ம-7)

## தமிழ் அரசியல்...

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தை யாழ்ப்பாண ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தாம் எப்போதும் இருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்தை முன்னிலைப்படுத்துவதாக உறுதி அளித்த எவரும் தேர்தலை நடத்தவில்லை எனவே பொய்யாக வாக்குறுதிகளை வழங்க நான் விரும்பவில்லை.

13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் நாட்டு மக்களுடன் கலந்தாலோசித்து அது குறித்து நன்றாக ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு இணைக்கப்படாது, அதே வேளை பொலிஸ் அல்லது காணி அதிகாரங்கள் இந்தப் பகுதிகளுக்கு வழங்கப்படாது என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## ஜனாதி...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் அறிக்கையொன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)

## திரு...

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் அபிவிருத்தி என்ற போர்வையில் இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டு குடியேற்றங்கள் நிறுவப்பட்டிருப்பதாகவும், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதிலிருந்து இக்குடியேற்றங்கள் அதிகரித்திருப்பதாகவும் அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை வலுவற்றவர்களாக்கும் பொருட்டு அரசாங்கங்கள் மற்றும் இராணுவத்தினரால் கையாளப்பட்டு வரும் பலதரப்பட்ட உத்திகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

"யுத்தத்தின் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்தும் இராணுவக் கண்காணிப்பின் கீழ் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் விரிவடைந்து வருகின்றது. வடக்கு, கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை இல்லாமல் செய்யும் அதேவேளை, அவர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அவர்களது சரித்திரம் மற்றும் கலாசாரம் என்பவற்றை முற்றாக அழிப்பதே இந்த நில அபகரிப்பு முயற்சிகளின் பிரதான இலக்காகும்" எனத் தஒக்லன்ட் இன்ஸ்டிடியூட்டின் ஸ்தாபகரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான அனுராதா மிட்டால் சுட்டிக்காட்டியிருக்கிறார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2024.09.12 — சீட்டிழுப்பு இலக்கம் 5594 — V 5 9 5 8 0 3
அத சம்பத — V 5 8 0 3 — சீட்டிழுப்பு இலக்கம் 169

தன நிதானய — திகதி 2024.09.12 — சீட்டிழுப்பு இலக்கம் 1624 — I 26 73 78 82 I — Double Chance 68047

மெகா பவர் — திகதி 12/09/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1942 — B 17 09 15 30 52 — 97816

லக்கி 7 VIP — திகதி 2024.09.12 — சீட்டிழுப்பு இலக்கம் 420 — K 9 8 9 2 5 1 K

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3836 — சீட்டிழுப்பு திகதி 12.09.2024 — T 20 37 46 77 — T 30315

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.09.12 — சீட்டிழுப்பு இலக்கம் 903 — சிம்மம் 15 51 57 59 சிம்மம் — 64852 — 26

உத்தியோகபூர்வ முடிவுகள் — 12.09.2024 — வெற்றி வாரம் 302 — மஞ்சள் — W 5 7 2 2 6 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,903,292.00 — 57371

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2568 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 12.09.2024 — தினம் வியாழன் — 09 16 26 52 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,374,895.20

சனிதா — திகதி 2024.09.12 — வெற்றி வாரம் 4729 — சிவப்பு — 15 20 42 65 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,773,686.40 — 72330

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4280 — தினம் வியாழக்கிழமை — சீட்டிழுப்பு திகதி 2024.09.12 — 04 05 44 53 சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000.00 — 191537 — 286430

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Z 20 09 16 55 69 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 544,581,222.20 — 1744 — 12.09.2024 வியாழன்

அத கோடிபதி — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2394 — சீட்டிழுப்பு திகதி 2024.09.12 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,425,813.60 — 12 34 50 73 Q — 334561

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தில் A/L 2026
வர்த்தகப் பிரிவில்
கல்வி கற்றுக்கொண்டிருந்த



## செல்வி வினுதா விஜயகுமார்

மாணவியின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும் (1924)

K.P.C கல்வி நிறுவன இயக்குனர், ஆசிரியர்கள், மாணவர்கள்
இருபாலை வீதி. கோண்டாவில்.

## பருத்தித்துறை...

வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,60)

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (340)

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் சுப்பர் மார்க்கட்டுக்கு வேலையாட்கள் தேவை.
காசாளர் - கணினி தெரிந்தவர்கள் (ஆண்கள்/ பெண்கள்)
பொதி செய்பவர்கள் - பெண்கள்

**077 355 1631**
T.T.R.Supermarket
85,87, Rakka Road, Jaffna. (1923)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## Village Hotel
### Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை ⟹ கொழும்பு
யாழ்ப்பாணம் ⟹ கொழும்பு
இருவழிச் சேவை. (இரவு/ பகல்)

தொடர்புகளுக்கு: (1868)
**077 544 8503**

## மின்சார காட்சியறை பணியாளர் வெற்றிடம்

- காட்சியறை விற்பனையாளர்கள் - ஆண்கள், பெண்கள்
- (அலங்கார மின் விளக்குகள், மின்சார உபகரணங்கள், மின்சாரப் பொருட்கள்)
- கணினி அறிவு/ முன் அனுபவம் விஷேட தகைமையாக கொள்ளப்படும்)
- முன் அனுபவம் உடையவர்களுக்கு விஷேட கொடுப்பனவு வழங்கப்படும். (339)

✓ EPF/ ETF கொடுப்பனவு வழங்கப்படும்
✓ நிரந்தர தொழில்

❖ சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்.

**ESS JEY ELECTRICALS, No.09, STANLEY ROAD, JAFFNA.**
021 2222564/ 021 2227430

## New City கோழி Farm

34 வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள், முட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

- 24 மணிநேர சேவை
- புறோயிலர் இறைச்சி
  சில்லறை - 1000 /=
  10 Kg மேல் - 950 /=
- உயிருடன் புறோயிலர்
  1 Kg – 620 /=
- உயிருடன் தேவைப்படுபவர்கள் முதல்நாள் காலை 10 மணிக்கு முன்பு பதிவு செய்யவும் (1916)

**New City கோழி Farm**
சின்னக்கடை மார்க்கட் முன்பாக
குருநகர், யாழ்ப்பாணம்.

## A/L - 2024 மாணவர்களுக்கான...
### " புவியியல் கருத்தரங்கு "

ஆசிரியர் - N.BABU

- 16.09.2024
- 13.10.2024
- 17.09.2024
- 14.10.2024

( ஆரம்பம் - 16.09.2024
திங்கள் : 8.00 am) (C-1174)

⇨ புதிய, வெளி மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
⇨ எதிர்பார்க்கை வினாக்கள் ஆராயப்படும்.
⇨ கையேடுகள் வழங்கப்படும்.

T.P - 077 936 5087
**DMI**
ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்



## இயலும் ஸ்ரீலங்கா

### எதிர்காலத்துக்கான வலுவூட்டலும் அபிவிருத்திக்காக ஒன்றிணைதலும்

பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலையான அபிவிருத்திக்கான தந்திரோபாயங்கள் தொடர்பான கலந்துரையாடலுக்கு வட மாகாணத்திலுள்ள தொழில் நிபுணர்கள் மற்றும் இளைஞர்களை அழைக்கின்றோம்.

பிரதம விருந்தினர்
மாண்புமிகு ஜனாதிபதி கௌரவ.
**ரணில் விக்கிரமசிங்க**

இடம் : வலம்புரி நட்சத்திர விடுதி, மாநாட்டு மண்டபம்
திகதி : 14.09.2024
நேரம் : காலை 10.30

ஒழுங்கமைப்பு
ஐக்கிய தேசிய கட்சி, தொழில் நிபுணர்கள் பிரிவு
076 113 1182 (C-1176)

## வணிகக்கல்வி கருத்தரங்கு
### A/L 2024

ஆரம்பம் - 16.09.2024
திங்கள் 2.15 - 5.30

**DCM** பிரதான மண்டபம் யாழ்நகர்

**NSK Final exam part - 1, part - 2**

- கருத்தரங்கு 30+ மணித்தியாலங்கள் கொண்டது.
- பரீட்சையை நோக்கிய பகுதி I மற்றும் பகுதி 2 இற்கான மாதிரி பயிற்சி வினாக்கள்.
- 18 தேர்ச்சிகளையும் உள்ளடக்கிய சிறு குறிப்புக்கள்.
- கையேடுகள் வழங்கப்படும், வெளிமாணவர்களும் கலந்து கொள்ளலாம். (1915)

0777789815/ 077278 8489
**N.S.KAPIL** BBM(HONS)SPL IN MARKETING

## V2 VISA SERVICES
### கனடா Visit Visas

077 77 20 322
077 77 19 322
Air Tickets

- கனடா PASSPORT APPOINTMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1175)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள். (இரு பகுதியும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna. (C-1175)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை கல்லறைகள் பற்றிய
# மீள் அறிவித்தல்

யாழ்ப்பாணம், புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பெரும் எண்ணிக்கை யிலான கல்லறைகள் பல வருடங்களாக எதுவித பராமரிப்போ, திருத்தமோ இல்லா மல் சிதைவுற்றும் பெயர் விபரங்கள் எதுவும் இன்றி உள்ளன. இந்த நிலையில் உள்ள கல்லறைகள் எம்மால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

தமது கல்லறைகளுக்குரிய சான்றுப்பத்திரம் வைத்திருப்போர் அவற்றை பேராலயப்பணி மனையில் பதிவு செய்து புதுப்பித்துக்கொள்ளும்படி ஏற்கனவே அறிவிக்கப் பட்டது.

இலங்கையிலோ வெளிநாட்டிலோ கல்லறைகளுக்குரிய சான்றுப் பத்திரம் வைத்திருப்போர் தயவுசெய்து பேராலய பணிமனையில் தொடர்பு கொண்டு பதிவினைப் புதுப்பித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நவம்பர் மாதம் 2 ஆம் திகதி நம் உறவுகளின் கல்லறைகள் தரிசித்து வேண்டுதல் செய்யும் நாள். இந்நிகழ்வுக்குப் பின்னரும் யாரும் கவனிக்காத, சிதைந்த நிலையில் உள்ள கல்லறைகள் யாழ்ப்பாண பேராலயப் பொறுப்பில் எடுத்து, அவ்விடங்கள் தேவைப்படுவோர்க்கு வழங்க வேண்டியுள்ளன.

தயவுசெய்து இதைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அருட்திரு. ம.ஜெறோ செல்வநாயகம்
பேராலய பங்குத்தந்தை
நிர்வாகி - புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை (C-1173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.